# ‘‘முன்னுரிமை அனுமதி’’ (Priority Pass)

மனதிற்கினிய இடங்களுக்கு விடுமுறைப் பயணங்கள் மேற்கொள்வதை தமது வாழ்கைமுறையாகக் கொண்டவர்களுக்கு... நீங்கள் எந்த விமான சேவையில் எந்த வகுப்பில் பயணம் செய்தாலும் உங்கள் பயணமும் இடைவழித் தரிப்பும் மன அழுத்தமற்றதாக இருப்பதை உறுதிப்படுத்த நாம் விரும்புகிறோம். ‘‘முன்னுரிமை அனுமதி’’ (Priority Pass) என்ற உலகின் மிகப் பெரிய சுயாதீன ஓய்வறைத் திட்டத்தில் பங்குகொள்வதன் மூலம் நீங்கள் இப்போது எந்தவொரு விமான நிலையத்திலும் வழமையான பரபரப்பு மற்றும் சந்தடிகளிலிருந்து விலகி, அமைதியான சூழலில் ஓய்வெடுக்க முடியும்.

**600க்கு மேற்பட்ட விமான நிலையங்களில்**
**VIP ஓய்வறைக்கான உங்கள் திறவுகோல்**

இந்த ஆவணத்தின் ஆங்கில அல்லது சிங்கள பிரதி உங்களுக்குத் தேவைப்படின், தயவுசெய்து www.hsbc.lk என்ற எமது இணையத்தளத்தை நாடவும். அல்லது எமது கிளையொன்றில் கேட்டுப் பெறவும்.

**HSBC வீசா சிக்னேச்சர் கார்ட் வைத்திருப்பவர்** என்ற முறையில் நீங்கள் **ஒரு தடவைக்கு அ.டொ. 25 என்ற விசேட கட்டணத்தை** செலுத்துவதன் மூலம் 600க்கு மேற்பட்ட விமான நிலையங்களில் VIP ஓய்வறையில் தங்குவதற்கு அனுமதி பெறலாம்.

குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை அனுசரிப்பது கட்டாயமானதாகும். VIP ஓய்வறை பற்றிய மேலதிக விபரங்களுக்கு www.prioritypass.com என்ற இணையத்தளத்தை அல்லது www.hsbc.lk என்ற .இணையத்தளத்தின் ஊடாக ஓய்வறை வழிகாட்டியை நாடவும்.

மேலதிக விபரங்கள், மறுபக்கத்திலுள்ள ‘‘அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்’’ என்ற பகுதியிலும் தரப்பட்டுள்ளன.

**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்**

**கேள்வி: முன்னுரிமை அனுமதி என்றால் என்ன?**

பதில்: முன்னுரிமை அனுமதி என்பது உலகின் மிகப் பெரிய சுயாதீன விமான நிலைய ஓய்வறைப் பிரவேசத் திட்டமாகும். உலகெங்குமுள்ள 600க்கு மேற்பட்ட விமான நிலைய ஓய்வறைகளில் உடனடியாகப் பிரவேசிக்கும் உரிமையை முன்னுரிமை அனுமதி அட்டை உங்களுக்கு வழங்கும். உங்களுக்கான தனிப்பட்ட முன்னுரிமை அனுமதி அட்டை உங்கள் HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட்டுடன் இலவசமாக வழங்கப்படும்.

**கேள்வி: எனது முன்னுரிமை அனுமதி அட்டையை நான் எதற்காகப் பயன்படுத்தலாம்?**

பதில்: உலகெங்குமுள்ள பட்டியலிடப்பட்ட விமான நிலைய ஓய்வறை ஒன்றில் பிரவேசிப்பதற்கு நீங்கள் இந்த முன்னுரிமை அட்டையைப் பயன்படுத்தலாம். நீங்கள் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் இரத்துச்செய்கைகள், தாமதங்கள், புறப்பாட்டு மண்டபத்தின் நெரிசல்கள் முதலியவற்றினால் ஏற்படும் அசௌகரியங்களிலிருந்து விடுபட்டு நிம்மதியாகத் தரித்திருக்க இது உதவும். இத் திட்டத்தில் பங்குபற்றுவது தொடர்பான விபரங்களுக்கு www.prioritypass.com என்ற இணையத்தளத்தை நாடவும்.

**கேள்வி: எனது முன்னுரிமை அனுமதி அட்டை இலவசமானதா?**

பதில்: ஆம். நீங்கள் மதிப்பிற்குரிய HSBC வீசா சிக்னேச்சர் கார்ட் வாடிக்கையாளர் என்பதால், உங்களுக்கான முன்னுரிமை அட்டை இலவசமாக வழங்கப்படும். எனினும், முன்னுரிமை அட்டையைப் பயன்படுத்தி ஓய்வறையைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் அறவிடப்படும்.

**கேள்வி: எனது முன்னுரிமை அனுமதி அட்டையைப் பயன்படுத்த நான் எவ்வளவு செலுத்த வேண்டும்?**

பதில்: உலகெங்குமுள்ள பங்காளி விமான நிலைய ஓய்வறையொன்றில் பிரவேசிப்பதற்கு முன்னுரிமை அட்டையைப் பயன்படுத்தும்போது, ஒருவர் ஒரு தடவைக்கு 25 அமெரிக்க டொலர் செலுத்த வேண்டும்.

**கேள்வி:** **எனது முன்னுரிமை அனுமதி அட்டையைப் பயன்படுத்தி நான் அணுகக்கூடிய விமான நிலைய ஓய்வறைகள் எவை?**

பதில்: உங்கள் முன்னுரிமை அங்கத்துவ அட்டையைப் பயன்படுத்தி 600க்கு மேற்பட்ட விமான நிலைய ஓய்வறைகளில் நீங்கள் பிரவேசிக்க முடியும். இந்த ஓய்வறைகளின் பட்டியலைப் பார்ப்பதற்கு www.prioritypass.com என்ற இணையத்தளத்தை நாடவும்.

**கேள்வி:** **எனது நண்பர்கள் அல்லது குடும்பத்தினரை ஓய்வறைக்குள் அழைத்துச்செல்ல முடியுமா?**

பதில்: ஆம், முடியும். ஓர் அதிதிக்கு 27 அமெரிக்க டொலர் என்ற அடிப்படையில் நீங்கள் ஓய்வறைக்குள் அதிதிகளை அழைத்துச் செல்ல முடியும். வரையறைகள் இல்லாத வரை, அநேகமான ஓய்வறைகள் எத்தனை அதிதிகளையும் அனுமதிக்கும். விபரங்களுக்கு www.prioritypass.com என்ற இணையத்தளத்திலுள்ள ஓய்வறை வழிகாட்டியைப் பார்க்கவும்.

**கேள்வி:** **நான் எனது முன்னுரிமை அனுமதி அட்டையைப் பயன்படுத்தும்போது பெறக்கூடிய சேவைகள் யாவை?**

பதில்: உணவு, பானங்கள், பத்திரிகைகள், Wi-Fi வசதி என்பன உட்பட விமான நிலைய ஓய்வறை ஒன்றில் கிடைக்கும் சகல வசதிகளையும் நீங்கள் அனுபவிக்கலாம். எனினும், ஒருசில ஓய்வறைகளில் சில வரையறைகள் இருக்கக்கூடும். அட்டையைப் பயன்படுத்துவதற்கு முன்னர், நீங்கள் செல்லவிருக்கும் ஓய்வறை பற்றிய முழு விபரங்களையும் www.prioritypass.com என்ற இணையத்தளத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளும்படி நாம் ஆலோசனை கூறுகின்றோம்.

**கேள்வி:** **நான் ஓய்வறை ஒன்றிற்குச் செல்லும்போது என்ன செய்ய வேண்டும்?**

பதில்: உங்கள் முன்னுரிமை அட்டையைச் சமர்ப்பித்து, பற்றுச்சீட்டில் கையொப்பமிட்டு, சேவைகளை அனுபவியுங்கள். சேவைகளைப் பெறும் இடத்தில் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. கட்டணமானது அடுத்த மாதத்தில் உங்கள் கிறெடிட் கார்ட்டின் பேரில் பட்டியலிடப்படும்.

**கேள்வி:** **எனது முன்னுரிமை அனுமதி அட்டை இல்லாமல் ஓய்வறை ஒன்றிற்குள் பிரவேசிக்க முடியுமா?**

பதில்: துரதிர்ஷ்டவசமாக, உங்கள் முன்னுரிமை அனுமதி அட்டை இல்லாமல் நீங்கள் ஓய்வறைக்குள் செல்ல முடியாது?

**கேள்வி:** **ஓய்வறையைப் பயன்படுத்துவதற்காக என்னிடம் கட்டணம் அறவிடப்படுவது எப்படி?**

பதில்: உங்கள் ஓய்வறைப் பாவனைக்கான 25 அமெரிக்க டொலர் கட்டணமும் அதிதிக்கான 27 அமெரிக்க டொலர் கட்டணமும் அடுத்த மாதத்தில் உங்கள் HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட் கணக்கில் நேரடியாகப் பட்டியலிடப்படும்.

**கேள்வி:** **எனது முன்னுரிமை அனுமதி அட்டை தொலைந்தால்/திருடப்பட்டால் அல்லது பதிலீட்டு அட்டையொன்று தேவைப்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?**

பதில்: உங்கள் முன்னுரிமை அனுமதி அட்டை தொலைந்தால் / திருடப்பட்டால்/சேதமடைந்தால் அல்லது பதிலீட்டு அட்டையொன்று தேவைப்பட்டால், தயவுசெய்து உடனடியாக 4 4722 75 என்ற தொலைபேசி இலக்கத்தினனூடாக எம்முடன் தொடர்புகொள்ளுங்கள். ரூ.2,500 என்ற கட்டணத்திற்கு நாம் பதிலீட்டு அட்டையை வழங்குவோம்.

**கேள்வி:** **முன்னுரிமை அனுமதி அட்டை தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் அல்லது கேள்விகள் இருந்தால் நான் யாருடன் தொடர்புகொள்ள வேண்டும்?**

பதில்: உங்கள் உங்கள் முன்னுரிமை அனுமதி அட்டை தொடர்பான எந்த விசாரணைக்கும் 4 4722 75 என்ற எமது 24 மணிநேர வாடிக்கையாளர் சேவைத் தொலைபேசியின் ஊடாக நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். முன்னுரிமை அனுமதி அட்டையின் பாவனை தொடர்பாக இத்துடன் தரப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் வாசியுங்கள்.

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

- முன்னுரிமை அனுமதி அட்டையைக் கைமாற்ற முடியாது. கார்ட் வைத்திருப்பவர் கையொப்பமிடும் பட்சத்திலும் காலாவதித் திகதி வரையும் மட்டுமே அது செல்லுபடியாகும்.

- கார்ட் வைத்திருப்பவர் தவிர்ந்த வேறெவரும் இந்த அட்டையைப் பயன்படுத்த முடியாது.

- முன்னுரிமை அனுமதி அட்டை ஒரு கொடுப்பனவு அட்டையுமல்ல, கடன் தகுதிக்கான சான்றும் அல்ல. அதனை அவ்வாறு பயன்படுத்த முயல்வது மோசடியாகும்.

- செல்லுபடியாகும் முன்னுரிமை அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்பட்டால் மாத்திரமே ஓய்வறைக்குள் செல்ல அனுமதிக்கப்படும்.

- முன்னுரிமை அனுமதி அட்டைக்குப் பதிலாக HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

- பங்காளி ஓய்வறைகளின் பட்டியலை [www.hsbc.lk](http://www.hsbc.lk).

- கார்ட் வைத்திருக்கும் ஒருவருக்கு ஒரு தடவைக்கு 25 அமெரிக்க டொலர், அதிதி ஒருவருக்கு ஒரு தடவைக்கு 27 அமெரிக்க டொலர் என்ற கட்டண நிபந்தனையின் பேரிலேயே ஓய்வறைக்குள் செல்ல அனுமதிக்கப்படும். அதிதிக்கான கட்டணம் உட்பட சகல கட்டணங்களும், முன்னுரிமை அனுமதி அட்டை தொடர்பாக வங்கியினால் அறிவிக்கப்பட்ட கட்டண வீதங்கள் மற்றும் விதிகளுக்கு அமைய, கார்ட் வைத்திருப்பவரின் கிறெடிட் கார்ட் கணக்கில் அடுத்த மாதம் பற்று வைக்கப்படும்.

- ஓய்வறை அனுமதிக்கான கட்டணங்கள் மற்றும் அவற்றில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் யாவும் கார்ட் வைத்திருப்பவருக்கு வங்கியினால் அறிவிக்கப்படும். ஓய்வறைக்குச் செல்வதற்கு முன்பே, பொருத்தமான கட்டணங்கள் மற்றும் வரையறைகளைத் தெரிந்துகொள்வது கார்ட் வைத்திருப்பவரின் பொறுப்பாகும்.

- ஓய்வறைக்குள் பிரவேசிப்பதற்கு முன்னுரிமை அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கும்போது, ஓய்வறை அலுவலர்கள் முன்னுரிமை அனுமதி அட்டையின் அச்சுப் பதிவொன்றை எடுப்பதுடன் "விஜயப் பதிவு" (Record of Visit) வவுச்சர் ஒன்றை கார்ட் வைத்திருப்பவருக்கு வழங்குவார்கள் அல்லது தமது பதிவேட்டில் பதிந்துகொள்வார்கள். சில ஓய்வறைகளில் இலத்திரனியல் அட்டை வாசிப்புக் கருவிகள் இருக்கும்.

முன்னுரிமை அனுமதி அட்டையின் பின்புறத்திலுள்ள காந்தப் பட்டியிலிருந்து கார்ட் வைத்திருப்பவரின் விபரங்கள் அவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும். பொருத்தமான இடங்களில், ‘‘விஜயப் பதிவு’’ வவுச்சரில் கார்ட் வைத்திருப்பவர் கையொப்பமிட வேண்டியிருக்கும். உடன் செல்லும் அதிதிகளின் எண்ணிக்கையும் இந்த வவுச்சரில் காட்டப்படும். ஒரு ஆளுக்கு ஒரு தடவைக்கான கட்டணம் இதில் காட்டப்பட மாட்டாது. கார்ட் வைத்திருப்பவருக்கான ஒரு விஜயத்திற்குரிய கட்டணமும், பொருத்தமாயின், அதிதிகளுக்கான கட்டணங்களும் ‘‘விஜயப் பதிவு’’ வவுச்சரின் அல்லது ஓய்வறை இயக்குநரினால் செய்யப்பட்ட பதிவின் அடிப்படையில் விதிக்கப்படும்.

- முன்னுரிமை அனுமதி அட்டையின் அச்சுப்பதிவு/பதிவுக் குறிப்பு மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவது ஓய்வறை அலுவலர்களின் பொறுப்பாகும். எனினும், தனது மற்றும் எவரேனும் அதிதிகளின் ஓய்வறைப் பாவனையை ‘‘விஜயப் பதிவு’’ வவுச்சர்/பதிவுக் குறிப்பு சரியாக எடுத்துக்காட்டுவதை கார்ட் வைத்திருப்பவர் உறுதிப்படுத்த வேண்டும். பொருத்தமான சந்தர்ப்பங்களில், ஓய்வறையில் வழங்கப்பட்ட ‘‘விஜயப் பதிவு’’ வவுச்சரின் ‘‘வாடிக்கையாளர்’’ பிரதியைத் தன்னுடன் வைத்திருப்பது கார்ட் வைத்திருப்பவரின் பொறுப்பாகும்.

- பங்குபற்றும் சகல ஓய்வறைகளும் மூன்றாம் தரப்பு நிறுவனங்களுக்கே சொந்தமானவை மட்டுமன்றி, அவற்றினாலேயே நடத்தப்படுகின்றன. பங்குபற்றும் ஓய்வறைகள் அல்லது அவற்றை நடத்தும் கழகங்களின் விதிகள் மற்றும் கொள்கைகளுக்கு கார்ட் வைத்திருப்பவரும் அவருடன் செல்லும் அதிதிகளும் இணங்கியொழுக வேண்டும்.

- இடவசதிக் குறைவின் காரணமாக ஓய்வறைகளுக்கான அனுமதி வரையறை செய்யப்படலாம். இது அந்தந்த ஓய்வறை இயங்குநரின் தனித் தீர்மானத்தைப் பொறுத்ததாகும். ஓய்வறை திறக்கப்படும்/மூடப்படும் நேரங்கள், வழங்கப்படும் வசதிகள், மற்றும் அங்கு பணியாற்றும் ஊழியர்கள் தொடர்பில் வங்கிக்கு எவ்வித கட்டுப்பாடும் கிடையாது.

- விளம்பரம் செய்யப்பட்ட வசதிகள் மற்றும் நன்மைகள் கிடைப்பதை உறுதிப்படுத்த வங்கி தன்னாலியன்ற சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும். எனினும், கார்ட் வைத்திருப்பவர் ஓய்வறைக்குச் செல்லும்போது அந்த வசதிகளும் நன்மைகளும்

கட்டாயமாகக் கிடைக்கும் என்பதற்கு வங்கியினால் வாக்குறுதி அல்லது உத்தரவாதம் வழங்க முடியாது.

- விளம்பரம் செய்யப்பட்ட வசதிகள் மற்றும் நன்மைகள் (முழுமையாக அல்லது பகுதியாக) வழங்கப்பட்டதால் அல்லது வழங்கப்படாததால் கார்ட் வைத்திருப்பவருக்கு அல்லது அவருடன் சென்ற அதிதிகளுக்கு ஏதேனும் இழப்பு ஏற்படின், வங்கி அதற்குப் பொறுப்பாளியாகாது.

- ஓய்வறைப் பட்டியலில் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், உடன்செல்லும் பிள்ளைகளுக்கும் (அனுமதிக்கப்படும் பட்சத்தில்) வளர்ந்த அதிதிக்குரிய கட்டணமே அறவிடப்படும்.
- ஓய்வறையில் இடநெரிசல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, ஒருவர் ஆகக் கூடுதலாக எவ்வளவு நேரம் (வழமையாக 3-4 மணித்தியாலங்கள்) தங்க முடியும் என்ற கொள்கையை அமுல்செய்யும் உரிமை பங்குபற்றும் ஓய்வறைகளுக்கு உண்டு. இது ஓய்வறையை நடத்துபவரினால் எடுக்கப்படும் தீர்மானமாகும். நீடித்த நேரம் தங்கியிருப்பதற்கு மேலதிகக் கட்டணத்தை அறவிடவும் ஓய்வறையின் நிர்வாகம் முடிவு செய்யலாம்.

- இலவச மதுபானம் வழங்குதல் (உள்நாட்டுச் சட்டம் அனுமதிக்குமாயின்) ஒவ்வொரு ஓய்வறை நடத்துநரினாலும் எடுக்கப்பட வேண்டிய தீர்மானமாகும். சில சமயங்களில், இலவச மதுபானம் பரிமாறுதல் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில், மேலதிக மதுபானத்திற்கான பணத்தை நேரடியாக ஓய்வறை அலுவலர்களிடம் செலுத்துவது கார்ட் வைத்திருப்பவரின் பொறுப்பாகும். (தனித்தனி ஓய்வறைகளின் கொள்கை விபரங்களை முன்னுரிமை அனுமதி அட்டை இணையத்தளத்தில் பார்க்கவும்).

- தொலைபேசி வசதிகள் (கிடைக்குமாயின்) ஓய்வறைக்கு ஓய்வறை வித்தியாசமாக இருக்கும். இச் சேவையை வழங்குவது ஓய்வறை நடத்துநரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். வழமையாக உள்நாட்டு அழைப்புக்கள் மட்டுமே இலவசமாக வழங்கப்படும். தொலைபேசி, தொலைநகல், இணையத்தளம், Wi-Fi, மென்பானங்கள், குளியல் மற்றும் ஸ்பா பரிகாரத்திற்கான கட்டணங்கள் (பொருத்தமான இடங்களில்)

ஒவ்வொரு ஓய்வறை நடத்துநரினாலும் அவரது விருப்பப்படி தீர்மானிக்கப்படும். அவற்றை நேரடியாக ஓய்வறை அலுவலர்களிடம் செலுத்துவது கார்ட் வைத்திருப்பவரின் பொறுப்பாகும்.

- கார்ட் வைத்திருப்பவரும் எவரேனும் அதிதிகளும் அன்றைய தின பயணத்திற்குச் செல்லுபடியாகும் விமானச்சீட்டை வைத்திருந்தால் மாத்திரமே ஓய்வறையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள். ஐக்கிய அமெரிக்காவுக்கு வெளியிலாயின், விமானச்சீட்டு மாத்திரமன்றி, புறப்படும் பயணத்திற்குரிய விமானத்தில் ஏறும் அனுமதிச்சீட்டும் (Boarding Pass) சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதாவது, வெளிச்செல்லும் பயணிகளுக்கு மட்டும். ஐரோப்பாவிலுள்ள சில ஓய்வறைகள் விமான நிலையத்தின் குறித்துரைக்கப்பட்ட Schengen பகுதியில் அமைந்துள்ளன என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும். Schengen நாடுகளுக்கு இடையே பயணம் செய்யும் அங்கத்தவர்களுக்கே இந்த ஓய்வறைகளைப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்படும். (ஒஸ்திரியா, பெல்ஜியம், செக் குடியரசு, டென்மார்க், எஸ்தோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரேக்கம், ஹங்கேரி, ஐஸ்லாந்து, இத்தாலி, லத்வியா, லித்துவேனியா, லக்ஸம்போர்க், மோல்டா, நெதர்லாந்து, நோர்வே. போலந்து, போர்த்துக்கல், ஸ்லொவாக்கியா, ஸ்லொவேனியா, ஸ்பெயின், சுவீடின், சுவிற்சர்லாந்து என்பனவே இந்த நாடுகளாகும்).

- ஒழுங்காக உடையணிந்து (ஐக்கிய அமெரிக்காவுக்கு வெளியே கட்டைக் காற்சட்டைகள் அனுமதிக்கப்பட மாட்டா) மரியாதையாக நடந்துகொள்ளும் அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் அதிதிகள் (பிள்ளைகள் உட்பட) மட்டுமே ஓய்வறைக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். சிசுக்கள் அல்லது குழந்தைகள் மற்றவர்களுக்கு தொந்தரவு உண்டுபண்ணும் விதத்தில் அழுது கூச்சலிட்டால் அவர்களை வெளியே கொண்டுசெல்லும்படி பெற்றோர் கேட்கப்படுவார்கள். இந்த நிபந்தனைகளுக்குப் பணிந்து நடக்காத காரணத்தினால் எவரேனும் அங்கத்தவரை அல்லது அதிதிகளை அனுமதிப்பதற்கு ஓய்வறை நடத்துநர்கள் மறுத்தால், அதனால் ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

- முன்னுரிமை அனுமதி அட்டை தொலைந்தால், களவுபோனால் அல்லது சேதமடைந்தால் உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும். வங்கியானது ஒரு அட்டைக்கு ரூ.2,500 என்ற கட்டணத்திற்கு பதிலீட்டு அட்டையை 14 வேலை

நாட்களுக்குள் வழங்கும். கார்ட் வைத்திருப்பவர் செல்லுபடியற்ற அட்டையொன்றைப் பயன்படுத்தி, தனியாகவோ அதிதிகளுடனோ ஓய்வறையைப் பயன்படுத்தினால், அவரிடமிருந்து மேலதிக கட்டணம் அறவிடப்படும்.

- இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் உட்பட இந்த வசதி தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலாவது திருத்த, மாற்ற அல்லது முழுமையாகவோ பகுதியாகவோ வாபஸ் பெற்றுக்கொள்ள வங்கி உரிமை கொண்டுள்ளது.

வெளியீடு: ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் - ஸ்ரீலங்கா.